الدرس الثامن

السهو في الصلاة

பாடம் - 8

## தொழுகையில் ஏற்படும் மறதி

- தொழுகையில் ஒருவனுக்கு மறதி ஏற்பட்டால்-எவ்வாறெனில் தொழுகையில் மறதியாக ஒன்றை அதிகப்படுத்திவிட்டான் அல்லது ஒன்றைக் குறைத்துவிட்டான் எனில் அல்லது ரக்அத்தை அதிகப்படுத்தி விட்டதாகவோ அல்லது குறைத்து விட்டதாகவோ அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டால் மறதிக்காக அவன் ஸஜ்தா செய்ய வேண்டும்.
- தொழுகையில் மறதியாக ஒன்றை அவன் அதிகப்படுத்திவிட்டால் உதார ணமாக ருகூஃ,ஸஜ்தா, அமர்வு போன்ற ஒன்றை மறதியாக அவன் அதிகப்படுத்தி விட்டால் ஸலாம் கொடுத்த பிறகு மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.
- இவ்வாறே அவன் தனது தொழுகையில் மறதியாக ஒன்றை குறைத்துவிட்டால் உதாரணமாக தொழுகையின் நிலைகளில் ஒன்றை அல்லது தொழுகையில் ஓத வேண்டிய திக்ருகளில் ஒன்றை மறதியாக ஒருவன் விட்டு விட்டால் இப்போது அவன் விட்டது தொழுகையின் அதிமுக்கிய கடமையாக (ருகுன்) இருந்து அடுத்த ரக்அத்தில் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவதற்கு முன் அது நினைவுக்கு வந்தால் விடுபட்ட அந்த ருகுனை திரும்பவும் செய்து அதற்குப் பின்னுள்ள செயல்களைச் செய்து தொழுகையை நிறைவு செய்ய வேண்டும். இறுதியில் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.
- ஆனால் விடுபட்ட அந்த ருகுன் அடுத்த ரக்அத்தில் ஸூரத்துல் பாத்திஹாவை ஓத ஆரம்பித்த பிறகு நினைவுக்கு வந்தால் ருகுன் விடுபட்ட அந்த ரக்அத் வீணாகிவிடும். அந்த ரக்அத்துக்குப் பகரமாக அடுத்த ரக்அத்தை நிறுத்தி தொழுகையை நிறைவு செய்ய வேண்டும்.
- விடுபட்ட ருகுன் தொழுகை முடிந்து ஸலாம் கொடுத்த பிறகே நினைவுக்கு வருகிறதுளூ அதே சமயம் தொழுகை முடிந்து வெகு நேரமும் ஆகிடவில்லை எனில் உடனே ருகுன் விடுபட்ட அந்த ரக்அத்தை முழுமையாகத் தொழுது இறுதியில் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும். தொழுகை முடிந்து வெகுநேரமாகிவிட்டால் அல்லது உளூ முறிந்துவிட்டால் அந்தத் தொழுகையை புதிதாக மீண்டும் தொழ வேண்டும்.
- முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்தல் போன்று தொழுகையின் முக்கியக் கடமைகளில் (வாஜிப்) ஒன்றை மறந்துவிட்டால் ஸலாம் கொடுப்பதற்கு முன் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.
- ஆனால் தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டால் அதில் இரண்டு நிலை உள்ளது. ரக்அத்துகளின் எண்ணிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் உதாரணமாக இரண்டு ரக்அத் தொழுதோமா? மூன்று ரக்அத் தொழுதோமா? என்று சந்தேகம் எழுந்தால் குறைந்ததை அதாவது இரண்டுதான் தொழுதுள்ளோம் என்று கணக்கிட்டு-ஏனெனில் அதுதான் அவனிடம் உறுதியானதாக இருக்கும்- ஸலாம் கொடுப் பதற்கு முன் இரண்டு ஸஜ்தா செய்துகொள்ள வேண்டும். தொழுகையின் அதிமுக்கியக் கடமையை (ருகுன்) விட்டதாக சந்தேகம் எழுந்தால் விடுபட்ட அந்த ருகுனை திரும்பவும் செய்து அதற்குப் பின்னுள்ள செயல்களைச் செய்து தொழுகையை நிறைவு செய்ய வேண்டும். இறுதியில் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.
- ஆனால் தொழுகையில் இதுவா? அதுவா? என்று சந்தேகம் ஏற்பட்டு இரண்டில் ஒன்றுக்கு கூடுதல் சாத்தியக்கூறு இருந்தால் அதனடிப்படையில் செயல்பட்டு தொழுகையை நிறைவு செய்து இறுதியில் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.தொழுகையின் வாஜிபுகள்